http://www.tamilnaduboard.com

No. of Printed Pages : 8

919271 **6361**

பதிவு எண் | | | | | | | |

# தமிழ் இரண்டாம் தாள்

# Language – Part I – TAMIL – Paper II

(இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி)

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :** (i) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப்பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(ii) நீலம் அல்லது கறுப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** (i) இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

(ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

(iii) வினா எண் 38-க்கு உரிய படிவங்கள் விடைத்தாளுடன் இணைக் கப்பட்டுள்ளன. அதனைப் பூர்த்தி செய்யவும்.

## பிரிவு - I

(மதிப்பெண்கள் : 20)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

### பகுதி - I

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5x1=5**

1. 'வரும் வண்டி' இச்சொல்லில் மகரம் ________ மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கிறது.
   (அ) அரை (ஆ) ஒரு (இ) ஒன்றரை (ஈ) கால்

2. மாடு வயலில் உழுகிறது. இத்தொடரில் மாடு என்பது ________ குறிக்கும்.
   (அ) பசு (ஆ) கன்று (இ) காளை (ஈ) ஆடு

3. தேன் போன்ற மொழி என்பது ________ .
   (அ) விரியுவமை (ஆ) தொகையுவமை
   (இ) உருவகம் (ஈ) இவற்றுள் ஏதுமில்லை

[ திருப்புக

http://www.tamilnaduboard.com

http://www.tamilnaduboard.com



4. பொருளிலக்கணம் _________ வகைப்படும்.
(அ) இரண்டு (ஆ) மூன்று (இ) நான்கு (ஈ) எட்டு

5. இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்றுப் பல விகற்பத்தான் வருவது _________ .
(அ) நேரிசை வெண்பா (ஆ) இன்னிசை வெண்பா
(இ) கலிப்பா (ஈ) ஆசிரியப்பா

## பகுதி - 2

கோடிட்ட இடங்களை நிரப்புக. 5x1=5

6. தொழிலைக் குறிக்கும் சொல் _________ .

7. ஒரு பொருட் பன்மொழிக்குச் சான்று _________ .

8. கிழக்கு + நாடு என்பது _________ எனப் புணரும்.

9. ஒரு தலைக் காமம் என்பது _________ திணை.

10. ஒரே பொருள் தரும் பல சொற்கள் வருவது _________ அணி.

## பகுதி - 3

சுருக்கமாக விடையளிக்க. 10x1=10

11. இரட்டைக்கிளவியில் வலிமிகாது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.

12. நேற்று புயல் வீசியது ; அதனால் மரங்கள் சாய்ந்தன - கலவைத் தொடராக மாற்றுக.

13. தொகைச் சொல்லை விரித்து எழுதுக - 'ஐம்பொறி'.

14. பிறமொழிச் சொற்களை நீக்கி உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.
அனுமதி இன்றி அந்நியர் உள்ளே வரக்கூடாது

http://www.tamilnaduboard.com

http://www.tamilnaduboard.com



15. கீழ்காணும் உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைக்க.
இலவு காத்த கிளி போல

16. கீழ்க்காணும் தொடரில் உள்ள ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக.
நான் வாங்கிய நூல் இதுவல்ல

17. கீழ்க்காணும் தொடரில் உள்ள சந்திப் பிழைகளை நீக்கி எழுதுக.
தமிழில் வரலாற்று கருத்துக்களையும், பண்பாட்டு கூறுகளைவும் காண முடியும்

18. கீழ்க்காணும் தொடருக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியிட்டு எழுதுக.
ஒழுக்க முடைமை குடிமை என்றார் திருவள்ளுவர்

19. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
எருது கீச்சிட எலி எக்காளமிட்டது

20. உவமையை உருவமாக மாற்றுக.
விற்புருவம்

## பிரிவு - II

(மதிப்பெண்கள் : 10)

கீழ்க்கானும் வினாக்களுள் எவையேனும் ஐந்தினுக்கு விடையளிக்க. **5x2=10**

21. பகுபத உறுப்பிலக்கணம் தருக-'புக்கான்'.

22. ஔகாரக் குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

23. குறிப்புச் சொற்களுள் எவையேனும் நான்கினைக் குறிப்பிடுக.

24. முற்றெச்சம் என்றால் என்ன? சான்று தருக.

25. உடன்பட்டுக் கூறும் விடையின் பெயர் என்ன?

26. செம்மொழி - புணர்ச்சி விதி கூறுக.

27. தும்பைத் திணை என்பது யாது?

[ திருப்புக

http://www.tamilnaduboard.com

http://www.tamilnaduboard.com



## பிரிவு - III

(மதிப்பெண்கள் : 50)

குறிப்பு : பகுதி 3 இல் வினா எண் 35 -இல் காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது.

### பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டினுக்கு விடையளிக்க. 2x5=10

28. தாய்மொழி வளர்த்தல் தமிழர்தங் கடனே
வாய்மொழி புரத்தல் மற்றவர் கடனே
காய்மொழி தவிர்த்தல் கற்றவர் கடனே
ஆய்மொழி யுரைத்தல் அறிஞர்தங் கடனே - இப்பாடலில் பயின்று வரும் பாவுகையை விளக்கி எழுதுக.

29. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன் றுண்டாகச் செய்வான் வினை
இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணியைச் சுட்டி விளக்குக.

**அல்லது**

வஞ்சப்புகழ்ச்சி அணியைச் சான்றுடன் விளக்குக.

30. கீழ்காணும் குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.
நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

### பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டிற்கு ஒவ்வொன்றிற்கும் அரைபக்க அளவில் விடையளிக்க. 2x5=10

31. பரிதிமாற் கலைஞரின் தமிழ்ப் பற்றினை விளக்குக.

32. பாரத ரத்னா எம்.ஜி.இராமச்சந்திரன் பற்றிக் கட்டுரை எழுதுக.

33. இலிண்ட் கிரென் பண்பு நலன்களை விளக்கி எழுதுக.

### பகுதி - 3

34. (அ) கீழ்க்காணும் பகுதியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க. 3+2=5

பாரி ஸ்கூலில் இருந்து வீட்டிற்கு வந்தான் ; ஸ்கூல் பேக்கை தூக்கிப் போட்டான். அவனுடைய ரூமிற்குச் சென்று பேனைச் சுழலவிட்டான்; டி.வியில் கார்டூன் பிலிம் பார்த்தான்.

(ஆ) கீழுள்ள அரபு எண்களைத் தமிழெண்களாக மாற்றுக.
99, 78, 365, 124

http://www.tamilnaduboard.com

http://www.tamilnaduboard.com



35. கீழ்க்காணும் ஆங்கில உரைப் பகுதியைத் தமிழாக்கம் செய்க. 3+2=5

(அ) Schools do not stop with teaching the children the lessons alone. They do more. It is in the Schools that the boys and girls form some regular habits. They learn to behave in an orderly way. They are corrected whenever they go wrong.

(ஆ) கீழ்காணும் ஆங்கில பழமொழிகளில் எவையேனும் இரண்டினுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.

(1) Measure is a treasure.
(2) Take time by the forelock.
(3) Art is long and life is short.
(4) Self help is the best help.

35. குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா. 5x1=5

முயன்றால் எதுவும் முடியும்.

சிலி நாட்டில் ஒரு சுரங்கம். அது பூமிக்கடியில் ஈராயிரம் அடி ஆழமுடையது. தாமிரமும், தங்கமும் எடுப்பதற்காக வெட்டப்பட்ட சுரங்கம் அது.

அங்கு ஒரு நாள் பெரிய விபத்து நேர்ந்தது. கீழே சுரங்கத்தில் வேலை செய்த முப்பத்துமூன்று தொழிலாளர்கள் மேலே வர இயலாதவாறு சுரங்கம் இடிந்து மண் மூடியது.

அறுபத்தொன்பது நாள் போராட்டம். சிலி நாட்டு அனைத்துத் துறைகளும் அவர்களை வெளிக்கொணரப் பெரிதும் முயன்றன.

உள்ளே சிக்கிக் கொண்டவர்கள் சூரியனைக் காணாது நாளும் அல்லல் பட்டாலும் மனந் தளராது இருந்தனர். பூமியின் மேலிருந்து துளை போட்டு அதன் வழியே உணவும், மருந்தும் அவர்களுக்கு அனுப்பப்பட்டன. உள்ளே இருந்தவர்கள் மனம் தளராது முறையாக அவற்றைப் பங்கிட்டு உண்டு, வெளியே வரக் காத்திருந்தனர். அவர்களை மீட்கப் பேருந்துளை போட்டு அதன் வழியே மீட்புக் குழாயை மீட்புப் படையினர் அனுப்பினர். சுரங்கத்தில் இருந்த ஒவ்வொருவரும் துணிவுடன், பயப்படாது, விரைவு காட்டாது, ஒருவர் பின் ஒருவராக வெளியே வந்தனர். சிலி நாட்டு அதிபரே காத்திருந்து அவர்களை வரவேற்றார்.

சிலி நாட்டு சுரங்கப் பணியாளர்கள் மீட்கப்பட்ட அருஞ்செயல், மண்ணில் மகத்தான சாதனையாகும்.

(1) சுரங்கம் எதற்காக வெட்டப்பட்டது?
(2) சுரங்கத் தொழிலாளர்கள் எத்தனை பேர் விபத்தில் சிக்கினர்?
(3) விபத்தில் சிக்கியவர்கள் எவ்வாறு மீட்கப்பட்டனர்?
(4) எந்நாட்டு அதிபர் சுரங்கத் தொழிலாளர்களை வரவேற்றார்?
(5) மண்ணில் மகத்தான சாதனையாகக் கருதப்படுவது எது?

[ திருப்புக

http://www.tamilnaduboard.com

http://www.tamilnaduboard.com



## பகுதி - 4

36. கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றினுக்கு விடையளிக்க. 1x5=5

(அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக.

அன்றைய காலைப் பொழுதில் அங்காடித் தெருவில் என்றும் இல்லாத அளவிற்கு மக்கள் வெள்ளம். சாலை ஓரத்து வியாபாரமும் வெகுஜோராய் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது எதிர்பாராத வகையில் திடீரென்று பயங்கர சப்தம். திரும்பிப் பார்க்கையில் ............

அல்லது

(ஆ) கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை ஒன்று எழுதுக.

இயற்கை அல்லது குழந்தை

## பகுதி - 5

37. கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களில் எவையேனும் ஐந்தினை எடுத்து எழுதுக. 1x5=5

மனிதரெல்லாம் அன்புநெறி காண்ப தற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவ டைந்து
தனிமனிதத் தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வ தற்கும்.
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை
புனிதமுற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்
புத்தகசா லைவேண்டும் நாட்டில் யாண்டும்.

- பாரதிதாசன்.

http://www.tamilnaduboard.com

http://www.tamilnaduboard.com



## பகுதி - 6

38. கந்தனும், கமலமும் ஏழை விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த தம்பதியர். இவர்களின் வயது முறையே 42, 47. இவர்கள் 02.06.2016 அன்று இரண்டாம் வகுப்பு படுக்கை வசதி கொண்ட பெட்டியில், சென்னை எழும்பூரிலிருந்து இராமேஸ்வரம் செல்ல விரும்புகின்றனர். இவர்களுக்கு தொடர்வண்டி இருக்கை முன்பதிவுப் படிவத்தை நிரப்பி உதவி புரியுங்கள். **1x5=5**

## பகுதி - 7

39. (அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து அது குறித்த வினாக்களுக்கு விடையளிக்க. **3+2=5**

பாண்டியன் ஒவ்வொரு தேர்விலும் அறுபது மதிப்பெண்களுக்கு குறையாமல் பெறுவான். ஆனால் அவன் தந்தை அம்மதிப்பெண் போதாது என்றும், மேலும் முயற்சி செய்ய வேண்டும் என்றும் வற்புறுத்துகிறார். அதிக மதிப்பெண் பெறுவதற்காக அவனைத் தனிப்படிப்பிற்கும் அனுப்புகிறார். தனிப்படிப்பு சொல்லித் தருபவரின் பழகுந்தன்மை, அவனுக்குப் பிடிக்கவில்லை. வீட்டில் சொன்னால் தனிப்படிப்புக்குச் செல்ல விருப்பமில்லாமல் இவ்வாறு கூறுகிறான் என்று நினைப்பர் என மனத்துயரம் கொள்கிறான்.

(1) பாண்டியன் தன் சிக்கலுக்கு எவ்வாறு தீர்வு காண்பான்?

(2) நீங்கள் பாண்டியனாக இருந்தால் என்ன செய்வீர்கள்?

(3) உங்களைப் போன்ற மாணவர்களுக்குத் தனிப்படிப்பு தேவையா? ஆம் அல்லது இல்லை எனில் அதற்கான காரணம் கூறுக.

(ஆ) கீழ்காணும் சூழலைப் படித்து விடையளிக்க.

மாறன் பத்தாம் வகுப்புப் படிக்கிறான். சில நாட்களாக அவனுடைய செயல்களில் மாற்றம் ஏற்பட்டிருப்பதைப் பெற்றோர் உணர்ந்தனர். பள்ளி நேரம் முடிந்தும் அவன் வீட்டிற்குத் தாமதமாக வருகிறான். காரணம் கேட்டால், உண்மையைச் சொல்ல மறுக்கிறான். வீட்டில் அடிக்கடி பணம் கேட்டுத் தொந்தரவு செய்கிறான். நல்ல நண்பர்களுடன் அவன் பழகாததே இதற்குக் காரணம் என்று பெற்றோர் நினைக்கின்றனர்.

(1) பெற்றோர் மாறனைப் பற்றி நினைப்பது சரியா?

(2) நாம் எப்படிப்பட்டவர்களோடு நட்பு கொள்ள வேண்டும்?

[ திருப்புக

http://www.tamilnaduboard.com

http://www.tamilnaduboard.com



## பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 20)

### பகுதி - I

40. கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றினுக்கு விடையளிக்க. 1x10=10

(அ) சாலை வசதி வேண்டி இராமநாதபுரம் நகராட்சி ஆணையருக்கு கூட்டு விண்ணப்பம் வரைக. (இராமநாதபுரம் பாரதிநகரில் குடியிருப்பதாகக் கருதி விண்ணப்பம் வரைக. அஞ்சல் குறியீட்டு எண் : 623 501 )

அல்லது

(ஆ) நும் பள்ளியிலிருந்து ஓய்வு பெறும் தமிழாசிரியரைப் பாராட்டி பாராட்டு மடல் ஒன்று வரைக. (நும் பள்ளி அரசினர் மேல்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம் எனக் கொள்க).

### பகுதி - 2

41. கீழுள்ள பகுதிகளில் ஏதேனும் ஒன்றினுக்குக் குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக. 1x10=10

(அ) சாலை விதிகள் யாருக்கு - அறிவிப்பு விளக்குகளை மதித்தல் - விபத்து ஏற்படக் காரணம் - தலைக்கவசம் - உயிர்க்கவசம் - ஓட்டுநர் உரிமம் பெறுதல் - பயணத்தின் போது கைபேசி பயன்படுத்தாமை.

அல்லது

(ஆ) பாரதியின் பிறப்பும், இளமையும் - பாரதியின் விடுதலை வேட்கை - தேசியக் கவி - முன்னறி புலவர் பாரதி - சமுதாயத் தொண்டு.

-o0o-

http://www.tamilnaduboard.com